1973 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஆம்.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட குறிப்புப் புத்தகங்கள் இருக்குமானால், வெளிநாட்டிலிருந்து இறங்குகிற பயணிகள் டெல்லியிலே வந்திறங்கும்போதோ, பம்பாயிலே வந்திறங்கும்போதோ அந்த நகரத்திலுள்ள விமான நிலையத்திலேயே தமிழ் நாட்டைப்பற்றியும், தமிழ் நாட்டிலுள்ள நீலகிரியின் எழில் பற்றியும், குற்றாலத்தைப் பற்றியும் உள்ள புத்தகங்களை அங்கேயே கொடுத்தால், அவர்கள் தமிழ்நாட்டைச் சுற்றிப் பார்க்க வருவதற்கு ஆர்வம் ஏற்படுத்துவதாக இருக்கும். அதற்கான வழிவகை செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அந்தப் புத்தகங்கள் இப்போது தான் தயாராகிக் கொண்டு வருகின்றன. சுற்றுலா வாரியம் தற்போது பம்பாயிலே ஏர் இந்தியா கட்டடத்தில் ஒரு இடத்தை எடுத்து, விளம்பரம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, இந்த புக்லெட்டுகள் நான்டிடேயில் போல் பெரிய அளவில் இல்லாமல், சிறிய சிறிய புத்தகங்களாக அளிக்கப்படுமா, அல்லது பெரிய அளவில் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: கைட் புத்தகங்கள் என்றாலே நான்டிடேயில் போல் பெரிய அளவில் இருக்காது. ஆனால் நான்டிடேயில் போல் சுவையானதாக இருக்கும். அந்த வகையில் சென்னை, மகாபலிபுரம், காஞ்சிபுரம் ஆகிய மூன்று இடங்களைக் குறித்து ஒரு புத்தகமும், மதுரை, தஞ்சாவூர், திருச்சி, இராமேஸ்வரம் ஆகிய நான்கு ஊர்களைக் குறித்து ஒரு புத்தகமும், தமிழ்நாட்டிலுள்ள மலை வாசஸ்தலங்களைக் குறித்து ஒரு புத்தகமும், சிறிய அளவில் அழகான வகையில் வெளியிடப்படவிருக்கின்றன. அவைகள் பயணிகள் விரைவில் படித்துப் பார்த்து சுவைப்பெறத்தக்க வகையில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, அந்தப் புத்தகங்கள் உறுப்பினர்களுக்கு அனுப்பப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அது சுற்றுலா பயணிகளுக்கு கொடுப்பதற்காகத் தயாரிக்கப்படுகிறது. உறுப்பினர்கள் ஆர்வத்தைப் பார்க்கிறபோது அதை அளிக்கலாம் என்று நம்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அந்தப் புத்தகங்கள் எந்தெந்த மொழிகளில் வெளியிடப்படுகின்றன? ஹிந்தி மொழியிலும் வெளியிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இதில் மொழிப் பிரச்னைக்கு இடமில்லை: தற்போது வெளியிடப்படுகிற புத்தகங்கள் ஆங்கிலத்தில் வெளியிடப்படுகின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, ஜப்பான் போன்ற நாடுகளில் இது போன்ற சிறிய வெளியீடுகள் வெளிநாட்டிலிருந்து பயணிகள் வந்து தங்குகிற ஓட்டல்கள், விடுதிகள் ஆகிய இடங்களில் வைத்து விநியோகிக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட முறையில் இங்கேயும் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்கள, தனியார்த் துறையில் தற்போது இரண்டு புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. "ஆசியன் டிராவலர்ஸ்" என்று ஒரு புத்தகமும், "மெட்ராஸ் காலிங்" என்ற புத்தகமும் வெளியிடப்படுகின்றன. அந்தப் புத்தகங்களில் சென்னையில் நடக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் பற்றியும், தமிழ்நாட்டிலுள்ள ஒரு பகுதியின் சிறப்பைக் குறித்தும் கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. அவைகளை எல்லா ஓட்டல்களிலும், உணவு விடுதிகளிலும் வைத்து விற்றுக்கொண்டு வருகிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி. தலைவரவர்களே, சுற்றுலாப் பயணிகளுக்காக பிரசுரிக்கப்படுகின்ற புத்தகத்தை சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்களை அவ்விடங்களுக்கு அழைத்துச் செல்லவும் அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றிப் பார்ப்பதற்கு பாஸ் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. எல்லா சுற்றுலா இடங்களும் தமிழ்நாட்டிற்குள்தான் இருக்கின்றன. ஆகவே, உறுப்பினர்கள் தங்கள் வசதிப்படி அந்த இடங்களுக்குச் சென்று பார்த்து வருவதில் அரசுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை.